இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுப்வியலாளர் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் III பரீட்சை – 2024 சனவரி**

## (301) நிதி அறிக்கையிடல்

பரீட்சார்த்திகளால் அதிகளவில் விடப்பட்ட பொதுவான தவறுகள் இனங்காணப்பட்டன. வெற்றியடையாத பரீட்சார்த்திகள் அவர்கள் விட்ட தவறுகளை அடையாளங் காண்பதுடன், எதிர்காலப் பரீட்சைகளில் வெற்றி பெறுவதற்காக அனைத்து கோட்பாடுகள் பற்றியும் கற்றுக்கொள்ள வேண்டும்.

### பகுதி A

**வினா இல. 01**

**(a)** வினாவின் இப்பகுதியானது நிதிசார் தகவல்களின் பயனை மேம்படுத்துகின்ற தரம்சார் பண்புகள் பற்றிப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள், நிதித் தகவல்களின் அடிப்படைப் பண்புகள் என பாடப்புத்தகத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த நிதித் தகவல்களின் அடிப்படைப் பண்புகளை (தொடர்புடைமை மற்றும் நம்பிக்கையான பிரதிநிதித்துவம்) விபரித்திருந்தனர். பண்புகளை விபரிக்குமாறு வினாவில் கேட்கப்பட்ட போதிலும், சில பரீட்சார்த்திகள் பண்புகளை வெறுமனே பட்டியலிட்டிருந்தனர்.

**(b)** இங்கு, மூலதனப் பேணுகையின் இரண்டு முதன்மையான வகைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

இந்தப் பகுதிக்கு மிக மோசமாக விடையளிக்கப்பட்டிருந்தது. இவ்வினாவுக்கு விடையளித்த பரீட்சார்த்திகள் பல தவறான விடைகளையே வழங்கியிருந்தனர். ஒரு சிலர் மாத்திரமே நிதி மூலதனப் பேணுகை மற்றும் பௌதிக மூலதனப் பேணுகை எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**வினா இல. 02**

**(a)** இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் இரண்டு அதிகாரங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. ஆயினும் பரீட்சார்த்திகளால் துல்லியமான விடையை அளிக்க முடியவில்லை. எனவே அவர்கள் தங்களுடைய அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். சில பரீட்சார்த்திகள் SLAASMB ஆனது கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களைத் தயாரிக்கிறது எனப் பிழையாக எழுதியிருந்தனர்.

**(b)** இங்கு, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் மூன்று தொழிற்பாடு களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. மாணவர்களின் செயலாற்றுகை மேம்படுத்தப்பட வேண்டும். சில மாணவர்கள் பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைகுழுவின் தொழிற்பாடுகளாக SLAASMB இன் அதிகாரங்களை எழுதியிருந்தனர்.

**வினா இல. 03**

**(a)** வினாவின் இப்பகுதியானது பட்டியலிடப்பட்ட நிறுவனமொன்றின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்ற நிதிசாரா அறிக்கைகளை அடையாளங் காண்பதுடன் தொடர்புடையதாகும். வருடாந்த அறிக்கை பற்றிய போதிய நடைமுறை அனுபவம் இல்லாததால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. இங்கு நிதிசாரா அறிக்கைகளை இனங்காணுமாறு கேட்டிருந்த போதிலும், பலர் நிதி அறிக்கையின் கூறுகளை விடைகளாக எழுதியிருந்தனர். இதனால் புள்ளிகளை இழந்திருந்தனர். சில மாணவர்கள் எந்தச் சம்பந்தமும் இல்லாத வகையில் கம்பனியின் பெயர், முகவரி, கூட்டிணைப்புத் திகதி போன்றவற்றை விடைகளாக எழுதியிருந்தனர். சிலர் இப்பகுதிக்கு விடையாக வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படும் நிதி அறிக்கைகளை எழுதியிருந்தனர். இது வினாவைப் புரிந்துகொள்ளாமையைக் காட்டுகிறது.

**(b)** இங்கு, ஒருங்கிணைந்த அறிக்கையில் தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடுகளின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. மிகச் சிறியளவான பரீட்சார்த்திகளே சரியான விடையை அளித்திருந்ததால், இப்பாடப்பரப்பு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மேம்படுத்தப்பட வேண்டும். வினாவானது தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடுகளின் கீழான ஒரு பகுதியைப் பரீட்சித்திருந்த போதிலும், பல மாணவர்கள் வினாவை விளங்கிக் கொள்ளாது, இந்தப் பகுதிக்கான விடைகளாக ஒருங்கிணைந்த அறிக்கையின் பகுதிகளை எழுதியிருந்தனர்.

**வினா இல. 04**

**(a)** LKAS 38 – அருவச் சொத்துக்கள் என்ற நியமத்தின்படி, அபிவிருத்திக் கிரயத்தை ஒரு அருவச் சொத்தாக மூலதனப்படுத்தும் பொருட்டு திருப்திப்படுத்தப்பட வேண்டிய நிபந்தனைகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. இப்பகுதிக்கான மாணவர்களின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவை LKAS 38 இன் படியான, அருவச் சொத்துக்களின் பண்புகள் எனத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தனர். ஆனால், இது ''*அபிவிருத்திக் கிரயத்தை அருவச் சொத்தாக மூலதனப்படுத்தலுடன்*'' தொடர்புடையதாகும். மிகச் சிலரே உரிய விடையை அளித்திருந்தனர்.

**(b)** LKAS 38 – அருவச் சொத்துக்கள் என்ற நியமத்தின்படி, தரப்பட்ட மூன்று கிரயங்களும் அருவச் சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யப்பட முடியுமா என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் அந்த ஒவ்வொரு கிரயமும் அருவச் சொத்தா அல்லது இல்லையா என்பதை எவ்வாறு இனங்கண்டிருந்தனர் என்பதை விபரித்திருக்கவில்லை. மாறாக அவை ''ஆம்'' அல்லது ''இல்லை'' என எழுதப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

## பகுதி B

### வினா இல. 05

LKAS 7 இன் பிரகாரம், நேரில் முறையைப் பயன்படுத்தி, காசுப் பாய்வுக் கூற்றைத் தயாரிக்குமாறு இவ்வினா தேவைப்படுத்தியிருந்தது. மாணவர்களின் செயலாற்றுகை சிறப்பாக இருந்ததுடன், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு குறைந்தது 5 புள்ளிகளையாவது பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தொழிற்படு மூலதன நகர்வுகளை இனங்கண்டிருந்த போதிலும், அது காசுப் பாய்வை அதிகரிக்க வேண்டுமா அல்லது அடைப்புக்குறிக்குள் அல்லது அடைப்புக்குறி இல்லாமல் குறிப்பிடுவதன் மூலம் குறைக்க வேண்டுமா என்பதை அடையாளங்காணத் தவறியிருந்தனர். அத்துடன், சிலர் காசு உட்பாய்வு மற்றும் காசு வெளிப்பாய்வு பற்றிய புரிதலைக் கொண்டிருக்காததன் காரணமாக காசு உட்பாய்வு மற்றும் வெளிப்பாய்வை வேறு வழிகளில் குறிப்பிட்டிருந்தனர்.

பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான வழுக்கள் கீழ்வருமாறு :

- மிகச் சிலர் இந்தப் பகுதிக்கான விடையாக ஐந்தொகையை மீளவும் தயாரித்திருந்தனர்.
- வரிக்கு முன்னரான நிகர இலாபத் தொகை ரூபா 765/- (375/- + 230/- + 160/-) இனைச் சரியாகக் கணிக்க முடியவில்லை.
- பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளாலும் செயற்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் ஆகியவற்றின் வகைப்படுத்தல்கள் சரியாகச் செய்யப்படவில்லை.
- PPE கட்டண தேய்மானத்தைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.
- விற்பனை மீதான இழப்பைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.
- ஆண்டிற்கான பணிக்கொடைக் கட்டணம் கணிப்பிடப்படவில்லை.
- காணியை கொள்வனவு செய்ய செலவிடப்பட்ட தொகை கணிப்பிடப்படவில்லை.
- தொழிற்படு மூலதன மாற்றங்களைச் சரியாகக் காட்டத் தவறியிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் செய்முறைகளைக் காட்டத் தவறியிருந்தனர். சரியான செய்கை முறைகளைக் காட்டியிருந்த போதிலும், காசுப் பாய்வுக்கு எதிரே பெறுமானங்களைக் கொண்டு வரத் தவறிய பரீட்சார்த்திகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டன.

### வினா இல. 06

இவ்வினா நிதிக் குத்தகை மற்றும் வருடாந்த தேய்மானக் கட்டணத்தின் கணிப்பீடு ஆகிய 2 பகுதிகளைக் கொண்டிருந்தது.

**(a)** இந்தப் பகுதியில், முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றின் பிரித்தெடுப்புகளைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், பல பரீட்சார்த்திகள் என்ன கேட்கப்பட்டது என்பதை விளங்கிக் கொள்ளாது, குத்தகைத் தீர்ப்பனவு அட்டவணையைத் தயாரிக்கின்ற கட்டம் வரை மாத்திரமே செய்திருந்தனர். இதன் காரணமாக, இந்தப் பகுதிக்குரிய முழுமையான புள்ளிகளை அவர்களால் பெற முடியவில்லை. சில பரீட்சார்த்திகள் முற்பணக் கொடுப்பனவு ரூபா 3 மில்லியனைக் கழிக்காது மோட்டார் வாகனக் கிரயம் ரூபா 8 மில்லியனைப் பயன்படுத்தி குத்தகைத் தீர்ப்பனவு அட்டவணையைத் தயாரித்திருந்தனர். அத்துடன், சில பரீட்சார்த்திகள், பிரித்தெடுப்பின் சொத்தைப் பயன்படுத்தும் உரிமையை ரூபா

5 மில்லியன் எனத் தவறாகக் குறிப்பிட்டிருந்ததுடன் அதற்கான தேய்மானக் கட்டணமாக ரூபா 1.25 மில்லியனைத் தாக்கல் செய்திருந்தனர். இது, LKAS 17 – குத்தகைகள் என்ற நியமம் பற்றிய புரிதல் இன்மையைக் காட்டுகிறது. மேலும், பல பரீட்சார்த்திகள் முற்றடக்க வருமானக் கூற்றின் பிரித்தெடுப்பில் தேய்மானத்தைக் காட்டத் தவறியிருந்தனர். இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.

**(b)** இந்தப் பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சிறப்பாக அமைந்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் முழுமையான புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது. எவ்வாறாயினும், பல பரீட்சார்த்திகள் விமானத்தின் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த தேய்மானக் கட்டணத்தைக் கணிப்பிடுவதற்கான வினாவின் தேவைப்பாட்டைப் புரிந்து கொண்டிருக்கவில்லை. அவர்கள் விமானத்தின் ஒவ்வொரு பாகத்திற்குமான தேய்மானத்தைக் கணிப்பிட்டிருந்ததுடன் மொத்தத் தேய்மானத் தொகையைக் காட்டத் தவறியிருந்தனர். அத்துடன், தேய்மானத்தைக் கணிப்பிடும்போது, ஒடிவுப் பெறுமதியைக் கழிப்பதற்குத் தவறியிருந்தனர். இதனால் அவர்களால் முழுமையான புள்ளிகளைப் பெற முடியவில்லை.

## வினா இல. 07

இவ்வினா LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் என்ற நியமத்தையும் SLFRS 15 – வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் என்ற நியமத்தையும் தொடர்புபடுத்திய 2 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான அறிவு குறைவாக இருந்ததன் காரணமாக இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை மந்தமாக இருந்தது. அவர்கள் இந்தச் சம்பவம் ஊழியர் பணியிலிருந்தபோது இடம்பெற்றதால் கம்பனி இந்த நட்டஈட்டைச் செலுத்த வேண்டும் என்பன போன்ற ஒழுக்கநெறிக் கோணத்தில் வெறுமனே விபரித்திருந்தனர். சிலர் தொழினுட்ப அறிவு குறைவாக இருந்ததன் காரணமாக, தொகையை அளவிடாது *''கம்பனி தொகையை வழங்க வேண்டும்''* என வெறுமனே குறிப்பிட்டிருந்தனர். பல பரீட்சார்த்திகளிடம், அது ஓர் ஏற்பாடா அல்லது நிகழத்தக்க சொத்தா அல்லது நிகழத்தக்க பொறுப்பா என்பதை அடையாளங் காண்பதற்கான தேர்வு நிபந்தனை பற்றிய புரிதல் இன்றி வெறுமனே விடையளித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்பட்டவாறு, விவரணத்தின் தாக்கத்தை பரீட்சார்த்திகள் விளக்கியிருக்கவில்லை. மாறாக, அவர்கள் அது ஓர் ஏற்பாடா அல்லது நிகழத்தக்க சொத்தா என்பதை வெறுமனே குறிப்பிட்டிருந்தனர். சிலர் தரப்பட்ட விவரணத்தையே விடையாக எழுதியிருந்தனர்.

**(b)** இந்தப் பகுதியானது SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள் மூலமான வருமானம் என்ற நியமத்தின்படி, வருமானத்தை ஏற்பிசைவு செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய 5 படிநிலை மாதிரியில் காணப்படும் படிநிலைகளை இனங்காணுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கவில்லை. இது, இந்த நியமம் தொடர்பான புரிதல் இன்மையையே காட்டுகிறது. அதிகளவான பரீட்சார்த்திகள் 5 படிநிலை மாதிரியை விளங்கிக் கொள்வதற்கு மாறாக வெறுமனே நினைவில் வைத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இது பரீட்சார்த்திகள் விடையளித்த விதங்களிலிருந்து தெரியவந்தது.

## பகுதி C

### வினா இல. 08

இவ்வினா பிரசுரிப்புக்குப் பொருத்தமான முறையில் இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று, நிதி நிலைக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று, ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியவற்றைத் தயாரிப்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. பிரதானமாக, LKAS 2 – தொக்குகள், LKAS 36 – சேத இழப்புச் சோதனை, அடுத்தடுத்த மீள்மதிப்பீட்டின் ஏற்பிசைவு, LKAS 23 – கடன்படுகைக் கிரயம் மற்றும் அறவிட முடியாக் கடன் வசூலிப்பு ஆகியவற்றின் மீதான அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது.

தரப்பட்ட சீராக்கங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு :

(1) பல மாணவர்கள் விற்பனைப் பெறுமானத்திலிருந்து ரூபா 1,200,000/- இனையும் விற்பனைக் கிரயத்திலிருந்து ரூபா 800,000/- இனையும் கழித்திருந்ததுடன் விற்பனைக் கிரயத்திற்கான வித்தியாசத்தைக் (1,200 – 800 = 400) கூட்டாது ஆண்டிறுதி தொக்கு மீதியிலிருந்து ரூபா 800,000/- இனையும் கழித்திருந்ததுடன் தொக்குப் பெறுமதியாக ரூபா 23,200,000/- இனைக் காட்டியிருந்தனர். இன்னும் சிலர் ஆண்டிறுதித் தொக்கு மீதியிலிருந்து ரூபா 1,200,000/- இனைக் கழித்தபோது, தொக்கின் பெறுமதியாக ரூபா 22,800,000/- இனைக் காட்டியிருந்தனர்.

(2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதனைத் துல்லியமாகக் கணித்து, புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

(3) சேத இழப்பு பற்றிய சீராக்கமானது மிகவும் மோசமானதாகக் காணப்பட்டது. பலர் சேத இழப்பினை ரூபா 9,000,000/- ஆக அடையாளங் கண்டிருந்ததுடன் இயந்திரக் கிரயத்திலிருந்து கழித்திருந்தனர். சிலர் முன்கொணரற் தொகையை சொத்தின் வசூலிக்கத்தக்க தொகைக்கு எதிராக ஒப்பீடு செய்யாது, பயன்பாட்டுப் பெறுமதியை விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்ட சீர் மதிப்புடன் (ரூபா 8,400,000/- - ரூபா 9,000,000/-) ஒப்பிட்டதன் மூலம் சேத இழப்பாக ரூபா 600,000/- இனைக் கருதியிருந்தனர்.

(4) பல பரீட்சார்த்திகள் காணியின் ஆரம்ப மீதியாக ரூபா 35,000,000/- இனை எடுத்து, ஆண்டின் போதான மீள் மதிப்பீடான ரூபா 8,000,000/- இனைச் சேர்த்திருந்தனர். இதனால், பிற முற்றடக்க வருமானக் கூற்றில் மீள் மதிப்பீட்டு இலாபமாக ரூபா 8,000,000/- இனைக் காட்டியிருந்தனர். எவ்வாறாயினும், பரீட்சார்த்திகள் ஆண்டிறுதியில் உள்ள இறுதி மீதியைச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

(5) சலுகைக் காலத்தைக் கவனத்திற் கொண்டு, பரீட்சார்த்திகள் வங்கிக் கடன் வகைப்படுத்தலைச் சரியாகச் செய்திருந்தனர். எவ்வாறாயினும், தொழினுட்ப அறிவு குறைவாகக் காணப்பட்டதால், கடன்பெறுகைக் கிரய மூலதனமாக்கலின் செயலாற்றுகை மிகவும் மோசமானதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் இந்தச் சீராக்கத்தை தவிர்த்திருந்த அதே வேளை வேறு சிலர் கடன் பெறப்பட்ட திகதியிலிருந்து கடன்பெறுகைக் கிரயத்தைத் தவறாகக் கணிப்பிட்டிருந்தனர். இதனால், நிருமாணத்தின் ஆரம்பத் திகதியை கவனத்திற் கொள்வது தவறவிடப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் மூலதனப் புத்துருவாகும் வேலைகளுக்கு கடன்படுகைக் கிரயத்தைச் சேர்ப்பதற்குப் பதிலாக, மூலதனப் புத்துருவாகும் வேலையிலிருந்து கடன்படுகைக் கிரயத்தைக் கழித்திருந்தனர்.

(6) விநியோகச் செலவினங்களுக்கு முன்னர் பதிவழிப்புச் செய்யப்பட்ட அறவிடமுடியாக் கடன் ரூபா 600,000/- இனை வசூலிப்பது தொடர்பில், பெரும்பாலான பரீட்சார்த்திகளால் வியாபார வருமதிகள் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்படவில்லை. வேறு சிலர், அறவிடமுடியாக் கடனின் வசூலிப்பு தொடர்பான அறிவு மிகக் குறைவாக இருந்த காரணத்தால் வியாபார வருமதிகள் மீதியிலிருந்து ரூபா 600,000/- இனைக் கழித்திருந்தனர்.

இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

### வினா இல. 09

**பகுதி (a)** ஆனது **(i)** நிகர இலாப விகிதம், **(ii)** தொக்கு இருப்புக் காலம், **(iii)** கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் **(iv)** கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் **(v)** பங்கொன்றின் வருவாய் (EPS), **(vi)** விலை வருவாய் விகிதம் ஆகியவற்றைக் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது.

நிகர இலாப விகிதத்தைக்கூட கணிப்பிட முடியாத பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். ஒரு சில பரீட்சார்த்திகள் தொக்கு இருப்புக் காலத்தையும் கடன்பட்டோர் சேகரிப்புக் காலத்தையும் நாட்களில் காட்டுவதற்குப் பதிலாக சதவீதங்களில் காட்டியிருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் EPS கணிப்பீட்டைச் செய்திருக்கவில்லை. அதேபோல், அதிகளவான பரீட்சார்த்திகள் PE விகிதத்தையும் கணிப்பிட்டிருக்கவில்லை. சிலர் EPS ஐ PE ஆகக் காட்டியிருந்தனர்.

**பகுதி (b)** தொழில்துறை தொடர்பில் தரப்பட்ட விகிதங்களை **ஜயா லங்கா பீஎல்சீ** இன் செயலாற்றுகையுடன் ஒப்பிட்டு பொழிப்பு அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு தேவைப்படுதிதியது.

அறிக்கையைத் தயாரிக்க எந்தவொரு பரீட்சார்த்திக்கும் கடினமாக இருந்தது. செயல்வினைச்சொல் முற்றாகவே அலட்சியப்படுத்தப்பட்டிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகளால் முரண்களுக்கான சாத்தியமான காரணங்களை வழங்க முடியவில்லை. செயலாற்றுகையில் முரண்கள் தொடர்பில் கருத்துரைக்கும்போது, சிலர் தொழில்துறையுடன் ஒப்பிட்டு, கம்பனியின் செயலாற்றுகைக்குப் பதிலாக தொழில்துறையின் செயலாற்றுகை குறித்து கருத்துரைத்திருந்தனர்.

பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் சராசரி அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**மேம்படுத்தப்பட வேண்டிய பகுதிகள் :** விகிதங்களின் கணிப்பீடும் முரண்களின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கான இயலுமையும்.

### வினா இல. 10

சீர் மதிப்பு முறையைப் பயன்படுத்தி நன்மதிப்பைக் கணிப்பிடுதல், கம்பனிகளுக்கிடையிலான பரிவர்த்தனைகளை ஏற்பிசைவு செய்தலும் நீக்குதலும் போன்ற அடிப்படை ஒருங்கிணைந்த சீராக்கங்களுடன் நிதி நிலை பற்றிய ஒருங்கிணைந்த கூற்று பற்றி பரீட்சகரால் பரீட்சிக்கப்பட்டது. சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள், இரு கம்பனிகளது பெறுமானங்களையும் மாத்திரம் கூட்டியதன் மூலம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் சராசரிக்கும் அதிகமான புள்ளிகளை பெற்றிருந்தனர். மிகச் சிலர் வினாவை முழுமையாக விளங்கியிருந்ததுடன் முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், நன்மதிப்புக் கணிப்பீடானது பல பரீட்சார்த்திகளால்

சரியாகச் செய்யப்பட்டிருந்ததுடன் முழுமையான புள்ளிகளும் பெறப்பட்டிருந்தன. அதிகளவான பரீட்சார்த்திகள் ஒருங்கிணைந்த ஒதுக்கக் கணக்கிற்கான செய்முறைகளைச் செய்திருக்கவில்லை என்பதுடன் பரீட்சை மீதியில் காணப்பட்ட எண் பெறுமானங்களை வெறுமனே ஒருங்கிணைந்த கணக்குகளில் காட்டியிருந்தனர்.

சில பரீட்சார்த்திகளால் விடப்பட்ட தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன :

(1) தேறாத இலாபம் ரூபா 500,000/- ஆனது தொக்குகளிலிருந்து நீக்கப்படவில்லை.

(2) 20% தேறாத இலாபம் துணைக்கம்பனிக்கு பகிரப்பட்டது.

(3) தேறாத இலாபம் ரூபா 500,000/- இற்குப் பதிலாக ரூபா 600,000/- எனத் தவறாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(4) PPE இனை ரூபா 5 மில்லியனால் அதிகரிக்கத் தவறியிருந்தனர்.

(5) கம்பனிகளுக்கிடையிலான தனிச்சம் ரூபா 40 மில்லியனை நீக்குவதற்குத் தவறியிருந்தனர்.

(6) நன்மதிப்புச் சேதஇழப்பிற்கான சீராக்கத்தை தவறவிட்டிருந்தனர்.

அதிகளவான பரீட்சார்த்திகள் வினாத்தாளிலுள்ள வினாக்களின் ஒழுங்கில் விடையளித்ததால் இந்த வினாவுக்கு விடையளிக்கும்போது நேரம் முடிந்துவிட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அடிப்படையான ஒருங்கிணைந்த பதிவுகளைச் சரியாகப் பதிவு செய்யவில்லை. ஒதுக்கப்பட்ட நேரத்தினுள் பரீட்சார்த்திகளால் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க முடியாமைக்கு நேர முகாமைத்துவத்தில் காணப்பட்ட குறைபாடும் ஒரு காரணமாக இருந்தது. அத்துடன் ஒருங்கிணைப்புடன் தொடர்புடைய வினாக்களில் பயிற்சி செய்தது குறைவாக இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான பொதுவான விடயங்கள்</u>**

(1) முழுமையான பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் முழுவதையும் நன்றாகப் படித்து ஒவ்வொரு அலகு அல்லது பரப்புகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்தை முழுமையாக விளங்கிக் கொள்வதை விருத்திசெய்து கொள்ளவும்.

(2) பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாக வாசித்து கேட்கப்பட்ட வினாவுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.

(3) கணிப்பீடுகளுடன் தொடர்புபட்ட சகல செய்கை வழிகளையும் காட்டவும்.

(4) ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்படுமாயின் அத்தகைய எடுகோள்களை குறிப்பிடவும்.

(5) ஒவ்வொரு வினாவுக்குமான விடையையும் ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிப்பதுடன் வினா இலக்கங்களையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

(6) கையெழுத்து தெளிவாக இருப்பதில் கவனம் செலுத்தவும்.

(7) கடந்தகால வினாப்பத்திரங்களைப் பல தடவைகள் செய்து பார்ப்பது அறிவு, திறன்கள் மற்றும் வேகத்தைப் பெறுவதற்கு உதவி புரியும். இது எதிர்காலப் பரீட்சைகளில் அதே வகையான வினாக்கள் கேட்கப்படும்போது அனுகூலமானதாக அமையும்.

(8) இப்பாடத்துடன் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள், பரிந்துரைக்கப்பட்ட விடைகள், முன்னோடி வினாத்தாள்கள் கட்டுரைகளைப் படிப்பது அறிவை மேம்படுத்தும்.

(9) நேர முகாமைத்துவம் என்பது பரீட்சையின்போது முக்கியமானதொன்றாகும். விடையளிக்கும் போது ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளின் அடிப்படையில் பரீட்சார்த்திகள் நேரத்தைச் செலவிடவும்.

(10) தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் உறுதியான தெளிவுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -